[2012 நவம்பர் 2

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கருணைகூர்ந்து, அருள்கூர்ந்து இப்பகுதி மீனவ மக்களின் வாழ்வில் ஒளி வீசிட, இப்பகுதி கடற்கரையில் சிறு துறைமுகம் ஒன்றை அமைத்திடுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன் தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், சேறானது வெள்ளப்பள்ளம், விழுந்தமாவடி, வானவன்மாதேவி ஆகிய கிராமங்களில் கரை சேருகிறது. குளிர் காலத்தில் சேறு தானாகவே கரைந்துவிடுகிறது. சேறு எங்கிருந்து இங்கு வந்து கரைசேருகிறது என்பதை நன்கு ஆராய்ந்து, ஆய்வு மேற்கொள்ளப்படும். விழுந்தமாவடி, வானவன்மாதேவி, வெள்ளப்பள்ளம், புஷ்பவனம் ஆகிய கிராமங்களில் அவர்கள் மீன்பிடி தொழில் செய்வதற்கு தகுந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

28—

உள் விளையாட்டு அரங்கம்

***5707—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க இடவசதி உள்ளதால், உள் விளையாட்டு அரங்கம் சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒட்டுமொத்த இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், இளைஞர்களின் உள்ளங்களில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்துகொண்டு, வருங்காலத்தில் இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த இளைஞர்களின் எதிர்காலமாய்த் திகழப்போகும் மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

தமிழகத்திலுள்ள இளைஞர்கள் விளையாட்டுகளில் அதிக அளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், விருதுகள், ஊக்கத் தொகைகள், பயிற்சி உதவித் தொகைகள் வழங்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எங்கள் அரக்கோணம் தொகுதியைச் சேர்ந்த நகர, கிராமப்புற இளைஞர்கள், அரக்கோணம் நகரில் ஒரு பல்பயன்பாட்டு உள் விளையாட்டு அரங்கம் வேண்டுமென நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆனால், மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வழிவகை உள்ளதாகக் கூறப்பட்டு வருகிறது.

எங்கள் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மாவட்டத் தலைநகரமான வேலூருக்குச் செல்ல வேண்டுமென்றால், 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். இதனால் இளைஞர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இளைஞர்களின்மீது மிகுந்த அக்கறை கொண்ட அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 80 கிலோ மீட்டர் என்ற நீண்ட தூரத்தைத் கருத்திற்கொண்டு, எனது தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகரில் பல்பயன்பாட்டு உள் விளையாட்டு அரங்கம் ஒன்றை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலேயே தமிழ்நாட்டில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு விளையாட்டுத் துறையில் சிறப்பான அறிவிப்பையெல்லாம் அறிவித்திருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு விளையாட்டு அரங்கமும், ஒரு உள் விளையாட்டு அரங்கமும், நீச்சல் குளமும் அமைக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் குறிக்கோளாகும். அந்த அடிப்படையில், எல்லா மாவட்டத் தலைநகரத்திலும் இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, படிப்படியாக அந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளிலும், ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் நிலை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றவில்லையெனில், 70 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கென்று பைக்கா திட்டமும் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே மைதானம் அமைப்பதற்கு 5 இலட்சம் ரூபாயும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு 1¼ இலட்சம் ரூபாயும் வழங்கும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவோடு மாண்புமிகு

உறுப்பினரின் கோரிக்கையை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மாணவர் விடுதி

***13036—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் சிறுபான்மையினர் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாளைய பாரதத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கும் மனித நேயம் மிக்க மாணிக்கத் தலைவி, தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வராக விளங்கும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 3 ஆம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள் தமிழகத்தில் 56 விடுதிகளை அமைத்து, அதிலும் சிறுபான்மையினருக்காக 6 பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளுக்காக விடுதிகளை அமைத்து சாதனை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதியில் சிறுபான்மையின மாணவர்களுக்காக சிறுபான்மையினர் நல விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.